முருகப்பெருமான் துணை

**மகான் திருமூலதேவர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

02.05.2022, திங்கட்கிழமை

1. தருமத்தின் தலைவனே அரங்கா
தவசியாக வாழும் ஞான தேசிகா
பெருமைபட அருளாசி தன்னை
புகலுவேன் சுபகிருது தகர் திங்கள்
2. திங்களிலே மூவாறோர்திகதி சோமவாரம்
(சுபகிருது வருடம் சித்திரை மாதம் 19ம் நாள், 02.05.2022 திங்கட்கிழமை)
தேசிகனுக்கு திருமூலதேவர் யானும்
ஓங்கார உலகம் அமைய உரைப்பேன்
ஓங்கார குடில் படைத்து அருளும்
3. அருளும் அரங்கமகா ஞானியே
ஆறுமுகனார் சக்தி வடிவாக நின்று
அருளும் பொருளும் அழியா வரமும்
அகிலத்தில் தந்து வருகவே
4. வருமுலகில் உலக மக்கள்
வணங்கித் தொடர்ந்து வர
ஆறுமுகா என தீட்சை ஆசிபெற
அன்னதான மகா சேவையை போற்றி
5. போற்றியே தன்வரவில் ஒருபங்கை
புண்ணியமாகத் தந்து வர
ஆற்றல்பட அந்தவித ஒருபங்கு
ஆயிரம் பங்காக மடங்காக மாறி
6. மாறியே தேட்டு தனவளமும்
மனபலமும் கண்டு தேறுவர்
கூறியே அரங்கஞானிப்புகழை
குவலயம் எங்கும் கொண்டுச்செல்ல
7. செல்லவே இந்தப் பேருலகம்
செல்வ வளம் குன்றாதபடி
நல்விதமாய் இயற்கை வளம்கூடி
ஞானபண்டிதன் அருள்பெற்ற பூமியாக
8. ஆகவே கலியுகம் மாற்றம்
ஆபத்தில்லா ஞானயுகமாக
மிகைபட ஞானவான்கள் நிறைந்த
மாதருமம் மிகுந்த தருமபூமியாக
9. ஆகவே எங்கும் நல்சக்தி
அரங்கன் ஆசியாகக் கலந்து
யுகமாற்றம் நடந்தேறக் கூடும்
உயிர்கொலை நீக்கி உண்மை நெறியை

10. நெறியை உலகம் ஏற்று
நீதிமான்கள் தலைமைகொண்ட
அறிவு முதிர்ச்சி தெளிவு கொண்ட
ஆன்மீக ஞான ஆட்சியாக

11. ஆகவே உலகம் அடைந்துமே
ஆற்றலும் அமைதியும் மகிழ்வும்
மிகையான பாதுகாப்புமிக்கநல்
மேலவர்கள் ஆட்சியாக மாறும்
அருளாசி முற்றே

–சுபம்–

துறையூர் ஓங்காரக்குடில் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம் ஞானபண்டிதன் முருகப்பெருமான் தலைமையில் நடந்து வரும் உயர்ந்த சங்கமாகும். ஓங்காரக்குடிலில் நடைபெற்று வரும் தர்ம செயல்களுக்கும் அன்னதான பணிகளுக்கும் பொருளுதவி செய்து வருபவர்களுக்கு முருகப் பெருமான் நேரடியாக அருளாசி தருகிறார்.

ஓங்காரக்குடிலுக்கு கொடுக்கும் அன்னதான தொகை ஒன்றுக்கு பத்தாக, நூறாக, ஆயிரமாக, லட்சமாக, பலலட்சமாக, கோடியாக மாறி கோடீஸ்வரன் பட்டத்தை உருவாக்கி தரும் என்பது மகான் திருமூலர் வாக்காகும். ஓங்காரக்குடில் முருகப் பெருமான் தலைமையில் இயங்குவதாலே அன்னதானத்திற்கு பொருளுதவி செய்பவர்களுக்கு இந்த வாய்ப்பு கிட்டும் என்பது மகான் திருமூலரின் சத்திய வாக்காகும்.

1. நாட்டமாம் வேலனை நாளும் போற்றிட
வாட்டமும் இல்லை மக்களும் மகிழ்வரே.
2. மகிழவே வேலவன் மான்புடன் ஆண்டிட
அகிலம் செழிக்கும் ஆட்சி அருளாட்சியே.
3. நாட்டமாம் மூலனை நாளும் போற்றிட
வாட்டமும் இல்லை மனமும் செம்மையே.
4. திருமூலர் திருவடியை தினமும் போற்றிட
கருமூலங்கடக்க காட்டுவார் நலமே.
5. அம்மை மூலர் அருளினை போற்றிட
நம்மையும் காத்து நாட்டை ஆள்வாரே.

மூலன் திருவடியே காலனை வெல்லும்
மூலன் திருவடியே காலத்தை வெல்லும்
மூலன் திருவடியே ஞாலத்தை ஆளும்
மூலன் திருவடியே மும்மலத்தை வெல்லும்

–முருகனடிமை ஓங்காரக்குடிலாசான்